விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 14 செவ்வாய்க்கிழமை (30.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 346

இலங்கையில் நேற்று மட்டும்

## 4 எரிவாயு வெடிப்பு சம்பவங்கள்

கடும் அச்சத்தில் நாட்டு மக்கள்

(கொழும்பு) இலங்கையில் நேற்று மேலும் நான்கு இடங்களில் எரிவாயுக் கசிவால் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பாதுக்க, ஹன்வெல்ல, ஹட்டன் மற்றும் ஜா-எல ஆகிய பகுதிகளில் நான்கு வெடிப்புச் சம்பவங்கள் ஏற்பட்டன. (15ஆம் பக்கம் பார்க்க)

## காஸ் செறிமானம் மாற்றப்பட்டமை உறுதி

சபையில் நளின் பண்டார எம்.பி



(கொழும்பு) சமையல் எரிவாயு கொள்கலன்களில் 15

## சிலிண்டர் வெடிப்பை ஆராய நிபுணர் குழு நியமனம்

(கொழும்பு) சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் தொடர்பில் ஆராய நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. 15

## கோவிட் +747

(கொழும்பு) நாட்டில் நேற்று மேலும் 747 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இலங் 15

வட மாகாணத்தில் மேலும்

# 3 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிப்போம்

அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக சபையில் அமைச்சர் மகிந்தானந்த தெரிவிப்பு



(கொழும்பு) வடக்கில் மேலும் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் மேய்ச்சல் நிலத்திற்கான பற்றாக்குறை காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று பாராளுமன்றில் சுட்டிக் காட்டினார்.

இதன்காரணமாக மன்னார் மாவட்டத்தில் பண்ணையாளர்களுக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதாகவும் பாராளு 15

வவுனியாவில்

## உயிரிழந்தவருக்கு கொரோனா

(வவுனியா) வவுனியாவில் உயிரிழந்த ஆணொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள் 15

தெல்லிப்பழை சேந்தாங்குளத்தில்

## கிணற்றில் தவறிவிழுந்த 2 வயது குழந்தை பலி

(அராலி) தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சேந்தாங்குளம் பகுதியில், கிணற்றில் தவறி விழுந்த இரண்டு வயது குழந்தையொன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

நேற்று நண்பகல் 15

## சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு ஜேர்மன் அரசு உதவ வேண்டும்

ஜேர்மன் தூதுவரிடம் மாநகர முதல்வர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு 15

மாவீரர் தினம் அனுஷ்டிப்பு

## கோயில் பூசகர் உட்பட இருவர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு) மாவீரர் தினம் அனுஷ்டிப்புத் தொடர்பில் கோயில் பூசகர் உட்பட இருவர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவீரர் தினத்தை அனுஷ்டித்த இரண்டு பேரை தாம் கைது செய்துள்ளதாக அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர். 15

## கொரோனா 23 பேர் பலி

(கொழும்பு) இலங்கையில் மேலும் 23 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 15

'ஒமிக்ரோன்' ஆபத்தானது

## அனைத்து நாடுகளுக்கும் பரவும் அபாயம்

உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(வோஷிங்டன்) புதிதாக இனங்காணப்பட்டுள்ள "ஒமிக்ரோன்" வைரஸ் 15

World Health Organization

# மண்டைதீவு கடற்பரப்பில் கடல் கொந்தளிப்பு

## இரு படகுகள் நீரில் மூழ்கின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவு முனைக் கடற்பரப்பில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்புக் காரணமாக இரண்டு மீன்பிடிப் படகுகள் கடலில் மூழ்கியுள்ளன.

தொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. குருநகர் மீனவர்கள் படகுகளில் தொழிலுக்குச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடலில் திடீரென எழுந்து சுழியில் சிக்கி இரண்டு படகுகள் கவிழ்ந்துள்ளன. அவற்றில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து தொழிலுக்குச் சென்ற மீன்பிடிப் படகுகள் திரும்பியுள்ளன. (ம-3,33)

# ஏரிஎம் அட்டையை பயன்படுத்தி 6 இலட்சம் ரூபாய் பண மோசடி

## இருவரைத் தேடுகின்றது யாழ். பொலிஸ்

(யாழ்ப்பாணம்)

தனிநபர் ஒருவரின் தானியங்கிப் பணக் கொடுக்கல் வாங்கல் அட்டையை எடுத்து சுமார் 6 இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்ட இருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் தேடுகின்றனர்.

அவர்கள் இருவரது ஒளிப்படங்களை வெளியிட்டுள்ள பொலிஸார், சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் வழங்குமாறு பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

உரும்பிராயில் தனிநபர் ஒருவரின் வங்கிக் கணக்கின் தானியங்கி பணப்பரிமாற்றல் அட்டை காணாமற்போனமை தொடர்பில் அவர் அறிந்திருந்த நிலையில் வங்கிக் கணக்கிலிருந்து சுமார் 6 இலட்சம் ரூபாய் நிதி மீளப்பெறப்பட்டுள்ளது.

அதனை அடுத்து வங்கியை நாடியதுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வங்கியின் உதவியுடன் வங்கி அட்டையைப் பயன்படுத்தி பணத்தை மீளப்பெற்ற இருவர் தொடர்பான ஒளிப்படங்களைப் பொலிஸார் பெற்றுக்கொண்டனர்.

சம்பவம் இடம்பெற்று சில மாதங்கள் கடந்துள்ள நிலையில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்படாத நிலையில் பொது மக்களின் உதவியைக் கோருவதாக யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பளிக்கார கேட்டுள்ளார்.

குறித்த நபர்கள் தொடர்பான தகவல்கள் ஏதாவது தெரிந்தால் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் 0718591329 என்ற அலைபேசிக்குத் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3,33)

# பொதுமக்கள், ஊடகவியலாளரை அச்சுறுத்திய கடற்படைச் சிப்பாய்

(யாழ்ப்பாணம்)

மாதகலில் பொதுமக்கள், ஊடகவியலாளரை கடற்படைச் சிப்பாய் ஒருவர் அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டார்.

மாதகலில் இரு கிராம சேவகர் பிரிவுகளில் கடற்படையினருக்கு காணி அபகரிப்பதற்கான நடவடிக்கைகளை நில அளவைத் திணைக்களம் நேற்று மேற்கொண்டது.

இதன்போது அரசியல் பிரமுகர்களும் மக்களும் அவ்விடத்தில் ஒன்றுகூடி பாரிய எதிர்ப்பைக் காட்டி காணி அபகரிப்பு நடவடிக்கையை முறியடித்தனர்.

இதன்போது அங்கிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் குழுமியிருந்த மக்கள் மற்றும் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் விதத்தில் காணொளி பதிவு செய்துள்ளார்.

குறித்த கடற்படைச் சிப்பாயின் இந்த செயற்பாட்டிற்கு அங்கிருந்தவர்கள் விசனம் தெரிவித்தனர். (ம-3,104)

# யாழில் பாணின் விலை 85 ரூபாய்

## ஏனைய வெதுப்பக பொருட்களின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பாணின் விலையை 10 ரூபாயினால் அதிகரித்து 85 ரூபாயாக விற்பனை செய்வதெனவும் ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பேக்கரி உற்பத்தியாளர் சங்கம் மற்றும் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கங்களுடன் மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் பாணின் உற்பத்தி மற்றும் விலை தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கோதுமை மாவின் விலை அதிகரித்ததன் காரணத்தால் 450g பாணின் விலை 10 ரூபாயினால் அதிகரித்து 85 ரூபாயாக விற்பனை செய்ய உடன்பாடு எட்டப்பட்டது. ஏனைய வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது என யாழ்.மாவட்டச் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,33)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை உயர்பிரிவு பகுதித் தலைவர் திருமதி **ரேணுகா கேசவன்** அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

**சுப்பிரமணியம் தங்கரத்தினம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு கவலை அடைந்துள்ளோம்.

இதனால் துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களது துயரிலும் பங்குகொள்வதுடன் அன்னாரது ஆன்மா இறைவன் சந்நிதியில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/மல்லாவி ம.வி.

(8841)



## ரயர்கள் விற்பனைக்கு

பாவித்த ரயர்கள் விற்பனைக்கு உண்டு.(ரயர் நூலுக்கு பயன்படுத்தக்கூடியது.)

தொடர்பு

076 097 3121


# நாட்டின் பல பகுதிகள் நேற்று இருளில் மூழ்கின

(கொழும்பு)

மின் விநியோக கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாட்டின் பல பகுதிகளுக்கு மின் விநியோகம் தடை ஏற்பட்டுள்ளது.

கொத்மலை மின் நிலையத்தில் முதல் பியகம வரையான மின் விநியோக கட்டமைப்பில் கோளாறு காரணமாக இவ்வாறு மின் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் பெரும்பாலான பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. (ம-3)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்





வடமராட்சி வலய அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி

**அருட்செல்வி பிரசாத்**

அவர்கள்

15.11.2021 அன்று உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"ஆற்றலும் ஆளுமையும் கடமையிலே கண்ணியமும் கலங்கரை விளக்காகவே எதிர்காலம் மிளிர இறைபாதம் வேண்டி வாழ்த்துகின்றோம்"

கோட்டக்கல்விப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், கரவெட்டி.

(C-3121)


# நடன இயக்குநர் சிவசங்கர் கொரோனாவால் மரணம்

(சென்னை)



கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு கடந்த 10 நாட்களுக்கும் மேலாக ஹைதராபாத்தில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த பிரபல நடன இயக்குநர் சிவசங்கர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் திகதி பிறந்த அவர், உயிரிழக்கும்போது அவருக்கு 72 வயது. தேசிய விருதுபெற்ற நடன இயக்குநர் சிவசங்கர் மாஸ்டர் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மொழிகளில் 800க்கும் மேற்பட்ட படங்களுக்கு நடன இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.

அத்தோடு தமிழில் வரலாறு, பரதேசி, தானா சேர்ந்த கூட்டம், சர்கார் உள்ளிட்ட பல படங்களிலும் முக்கிய கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்.

இருக்கு பூவே உனக்காக படத்தில் நடன இயக்குநராக பணியாற்றியமைக்காக தமிழக அரசின் விருதும் வழங்கப்பட்டதுடன், மகதீரா படத்திற்கு தேசிய விருது பெற்றார்.

அதேவேளை பாகுபலி உள்ளிட்ட பிரபல பாடல்களுக்காக இவர் நடனம் அமைத்துக் கொடுத்துள்ளார். இந்நிலையில் திரையுலகினர் பலரும் அவரது மறைவுக்கு இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர். (ம-3)

## தொடர்ந்து அபகரிக்கப்படும் தமிழர் நிலங்கள்

# எதிர்ப்பை அடுத்து காணி சுவீகரிப்பு

# மாதகலில் இடை நிறுத்தம்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணம் மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு பகுதிகளில் கடற்படையினரின் தேவைக்காக காணிகளை சுவீகரிக்கும் முயற்சி மக்களின் எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.**



நேற்று திங்கட்கிழமை காலை மாதகல் கிழக்கு ஜே/150 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் நண்பகல் மாதகல் மேற்கு ஜே/152 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் கடற்படையினரின் தேவைக்காக அளவீட்டுப் பணிகளை நில அளவைத் திணைக்களம் முன்னெடுக்கச் சென்றனர்.

குறித்த பகுதிகளில் அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

எதிர்ப்பு நடவடிக்கைகளால் காணி அளவீட்டினை தற்காலிகமாக இடைநிறுத்திவிட்டு நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றனர். (நி-5-18-33-104)



## சிலிண்டர் வெடிப்பு

(ஹற்றன்)

ஹற்றன் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு கசிவு காரணமாக நேற்றுக் காலை வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

காலை உணவைச் சமைத்துக் கொண்டிருந்த போது இந்த வெடிப்பு ஏற்பட்டதாக உரிமையாளர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு கொள்கலன் மற்றும் எரிவாயு அடுப்புக்கான குழாயில் வெடிப்பு ஏற்பட்டதால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## முன்னாள் அரசியல் கைதி விசாரணைக்கு அழைப்பு

(நெளுக்குளம்)

வவுனியாவில் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் நேற்று அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா - தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரையே நாளை புதன்கிழமை கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4-5-250-299)

# அமைச்சுக்கள் பிரிக்கப்பட்ட முறை தவறானது-அத்துரலிய ரத்னதேரர்

(கொழும்பு)

எந்தத் தீர்மானங்களையும் எடுக்க முடியாத வகையில் அமைச்சுக்கள் பிரிக்கப்பட்டுள்ளதால், அவற்றை முதலில் ஒழுங்குபடுத்தி விஞ்ஞான ரீதியில் பிரிக்க வேண்டியது காலத்தின் தேவை என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பிரச்சினைகளுக்கு இது பிரதான காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மின் சக்தி மற்றும் எரி சக்தி அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கமத்தொழில் அமைச்சு ஓரிடத்தில், பெருந்தோட்டத் துறை அமைச்சு வேறோரிடத்தில். மகாவலி அமைச்சு இன்னுமோர் இடத்தில். பசளை வேறிடத்தில். அமைச்சர் மேலும் ஒரு இடத்தில்.

கடந்த அரசாங்கமும் இப்படியே அமைச்சுக்களை பகிர்ந்தது. இப்படி செயற்படும் போது சரியான தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துவது எப்படி என்ற பாரதூரமான பிரச்சினை ஏற்படுகிறது.

அதேவேளை சமையல் எரிவாயு கொள்கலன் வெடிப்பது சம்பந்தமான விடயத்தில் உடனடியாக தீர்வு அவசியம் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)



**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள விலைவாசிக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கோரியும் அக்கரப்பத்தனை டொரிங்டன் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

# பொதுப் போக்குவரத்துகளில் சுகாதார விதிமீறல்கள் அதிகரிப்பு

## உபுல் ரோஹன எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் பொதுப் போக்குவரத்துக்களில் கொவிட் தொற்றுக்கு எதிரான செயற்பாடுகள் மோசமாகியுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர்களால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்து வாகனங்கள் மற்றும் தனியார் வாகனங்கள் ஆசனங்களுக்கு மேலதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்கின்றன.

இந்த நிலைமை தொடருமாக இருந்தால், நாட்டில் கொவிட் தொற்றுக்கள் அதிகரிப்பதற்கான ஏதுக்கள் இருப்பதாக சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண எச்சரித்துள்ளார்.

எனவே அதிகாரிகள், பயணிகள் வாகனங்கள் தொடர்பில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் இல்லையெனில் நாடு மற்றுமொரு முடக்கலுக்கு செல்லவேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# ஒமிக்ரோனை தடுக்க விசேட செயற்றிட்டங்கள்

## விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

'ஒமிக்ரோன்' எனும் கொடிய கொரோனா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்குள் ஒமிக்ரோன் வைரஸ் நுழைவதைத் தடுக்கும் வகையில் 6 நாடுகளின் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அனைத்து விமான நிலையங்களிலும் சுகாதார பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் அனைத்துப் பயணிகளின் உடல் நிலையும் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைகள் ஒரு சிறப்பு செயலியைக் கூட அறிமுகப்படுத்தியுள்ளன என அவர் தெரிவித்தார். (நி-5)

# மூன்றாம் ஆண்டு

# நினைவஞ்சலி


## அமரர்

# சின்னப்பு யோசவ் செல்வநாயகம்



பிறப்பு
**1945.11.03**

இறப்பு
**2018.11.30**



விதையாய் கிடந்ததை
உம்மைச் செதுக்கி
விருட்ஷமாக்கினீர்!

நல்ல நாணயத்தினால்
நாணயம் சேர்த்தீர்!

நற்குடியினை ஆக்கும்
நற் தொழில் தந்தீர்!

கல்விச் சமூகமொன்றினை
உமது உறவாக்கினீர்!

அத்தனை துன்பங்களையும்
நகைச்சுவைக்குள் மறைத்தீர்!

நீங்கள் சிந்திய
வியர்வைத் துளிகள்
எமது வீடுகளில்
விளக்காய் எரிகிறது!

எங்களது ஒவ்வொரு
புன்னகையிலும்
உங்களது தியாகம் தெரிகிறது!

நேர்மையாய் உண்மையாய்
நல் மனிதர்களாய் நலம் வாழ
வழிதந்தீர்!

எம்முயர்வுகள் ஒவ்வொன்றிலும்
உங்களது உயிர் நிலையாகி
வாழும்!

ஆசீர் வணிக நிலையம்
2022, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : பிள்ளைகள்
யோ. செ. அலென்ஸ் நின்சன், கி.சே.அனிற்ராசுபோஜினி
யோ. செ. ரஜீவ் (London)

(C-3126)

# இராசிபலன்

30.11.2021
கார்த்திகை 14, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.18 மணிவரை
அத்தம் மாலை 5.13 மணிவரை
சுபநேரம் 10.44-12.14 மணிவரை
இராகுகாலம் 3.14-4.44 மணிவரை
சந்திராஷ்டமம்- பூரட்டாதி, உத்திரட்டாதி
ஏகாதசி விரதம்.

வளவன்


மேஷம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


ரிஷபம்

பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், அருமையான நாள்.


மிதுனம்

பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.


கடகம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.


சிம்மம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும்.


கன்னி

பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


துலாம்

ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு.


தனுசு

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் முன்னேற்றம் கூடும் நாள்.


கும்பம்

மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம்.


மீனம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

எதையும் துன்பம் என்று நினைத்தால் தான் துன்பம்


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் ஆண்டவன் அடியில்

06 ❖ 11 ❖ 1952



30 ❖ 11 ❖ 2017

## அமரர். தம்பன் ஐயாத்துரை

திதி:கார்த்திகை மாதம் பூர்வபக்க ஏகாதசி

நான்கு ஆண்டுகள் மறைந்திருந்தாலும் உம்
நினைவுகள் எம் உள்ளத்திலிருந்து அழியாது
இறைவனை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
மகன் ஐ.ரஜனிகாந்தன்
(C.T.B)
குடும்பத்தினர்.

(8806)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18 . 11 . 1946



இறப்பு
09 . 12 . 2020

## அமரர். வல்லி கந்தசாமி

(ஓய்வுபெற்ற பிரதேச சபை ஊழியர்)

திதி: ஏகாதசி

குடும்பத்தின் குலவிளக்காய்
திங்கள் ஒளிபோல் மிளிர்ந்தவரே
எங்கே சென்றீர்கள்
எம்மைவிட்டு ஐயா!
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி-
மருதங்கேணி
தெற்கு, தாளையடி.

தற்காலிக முகவரி-
மாதா கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.


தகவல்:
குடும்பத்தினர்.

(c-3118)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் வவுனியாவில் போராட்டம்

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் வவுனியா அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**




அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தினால் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு சுமை என்ற கருத்தை அரசாங்கம் விலக்கிக் கொள்ள வேண்டும், அரச உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளத்தை பத்தாயிரத்தால் உயர்த்த வேண்டும், அரச ஊழியர்களின் வயதெல்லையை 65 வயதாக உயர்த்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரச ஊழியர்களின் கருத்துச் சுதந்திரம் ஆகிய நான்கு விடயங்களை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் வவுனியாவில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-5-299)



யாழ்.மாவட்டத்தில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. (படம் : ரவிசாந்)

# தேவாலயம் மீதான தாக்குதல் திட்டமிடப்பட்ட செயற்பாடல்ல



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டைக்கு அண்மையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டது. பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள குறித்த தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணை நடத்தியதோடு தாக்குதலை நடத்திய கொட்டடி பகுதியைச் சேர்ந்த ஒருவரை கைது செய்தனர்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தெரிவித்த நாவாந்துறை பங்குதந்தை அருட்பணி யேசுரெட்ணம் இத்தாக்குதல் நடத்தியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதானவர் சித்தசுவாதீனம் அற்றவர் எனத் தெரிவித்தார்.(4-5-18-33-104)

# யாழ். மாவட்ட பட்டதாரிகள் வடக்கு ஆளுநருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)


வடக்கு மாகாண ஆளுநருக்கு, நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட யாழ். மாவட்ட பட்டதாரிகள் கடிதம் ஒன்றை நேற்று கையளித்தனர்.

இலங்கை பல்கலைக் கழகத்தில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து நியமனத்தில் தவறவிடப்பட்ட 60 ஆயிரம் பட்டதாரிகளில் யாழ். மாவட்ட பட்டதாரிகள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநருக்கு கடிதம் ஒன்றை கையளித்தனர். (4-5-33)


# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவ சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளதுஎனயாழ். மருத்துவ சங்க செயலாளர் அறிவித்தார். (4-5)



தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தினைப் பெற்ற கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலையை கௌரவிக்கும் விசேட நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், சிவபூமி பாடசாலை அதிபர் கலைவாணி குகதாஸன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் மற்றும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களின் மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (படம் :-சிவசாந்தன்)



கோண்டாவில் ஈழத்து சபரீமலை சபரீச ஐயப்பன் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. (படம் : கஜிந்தன்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் உயரம்: 5'9"<br>கி.பா: 51 செவ் 7 இல் சூரி 10 இல்<br>தகைமை/தொழில்: MBA(UK) BA (Business studies-UK) Owner-Super Market<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12168 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மகம் உயரம்: 5'2"<br>கி.பா: 38½ செவ் 3 சூரி 3<br>தகைமை/தொழில்: ஆராய்ச்சி உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12189 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'5"<br>கி.பா: 63 ½ செவ் 7 இல் சூரி 4 இல்<br>தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அல்லது அரச வேலை<br>தொ.இ: B/12169 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: செவ் 12 சூரி 10 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Cima இறுதி வருடம்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ:G/12193 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 48 செவ் 7 இல் சூரி 6 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L விவசாயம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் விவாகரத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/12172 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4 ஆம் பாதம்<br>கி.பா: செவ் 2 சூரி 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: வாடிக்கையாளர் உதவியாளர் (லண்டன்) PR இல்லை<br>எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும்<br>தொ.இ:G/12195 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 14 செவ் 11 சூரி 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/12173 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4 ஆம் பாதம்<br>கி.பா: 38 செவ் 9 சூரி 11 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ:G/12197 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

# மீள முடியாத கட்டத்தில் நாடு நிலைமை இன்னும் மோசமாகும்

## அதிர்ச்சியில் அரசாங்கம்



(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதாரம் எதிர்காலத்தில் கணிக்க முடியாத நிலையை எட்டும் என ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ.ஜயசுந்தர தெரிவித்தார்.**

டொலர் நெருக்கடி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை இயக்கும் பல செயற்பாடுகள் ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நாட்டிற்கு மோசமான காலகட்டம் உருவாகியுள்ளது.

கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இவ்வாறானதொரு கடினமான பொருளாதார காலகட்டத்தை தனது வாழ்நாளில் சந்தித்ததில்லை. இதற்கு முன்னரான காலப்பகுதியில் நாட்டின் வர்த்தக இருப்பு முன்பை விட சிறப்பாக இருந்தது.

கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு முன்பு, நாடு ஏற்றுமதி செய்வதை விட இரண்டு மடங்கு அதிகமாக இறக்குமதி செய்தது.

உலக கப்பல் மற்றும் சரக்கு விலைகள் தற்போது அதிகரித்துள்ளது. சுற்றுலா மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்பும் போது, வர்த்தகப் பற்றாக்குறை மாதத்திற்கு 10 பில்லியன் டொலர்களாகியுள்ளது.

இன்று நாடு 4 பில்லியன் டொலர் கடனில் சிக்கித் தவிக்கிறது என அவர் தெரிவித்தார். (நி-5)

## பாவனைக்கு உதவாத ஒரு தொகை உருளைக்கிழங்கு மீட்பு

(தம்புள்ளை)

தம்புள்ளை பிரதேசத்திலுள்ள களஞ்சியசாலை ஒன்றில் பாவனைக்கு உதவாத சுமார் 25 ஆயிரம் கிலோ கிராம் உருளைக்கிழங்கு கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த விடயத்துடன் தொடர்புடைய வர்த்தகருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தம்புள்ளை மாநகர மேயர் ஜாலிய ஓபாத தெரிவித்தார். (நி-5)

## மாகாண சபைத் தேர்தலில் தனித்தே பயணம்

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுதி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசாங்கத்தில் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு, அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து ஆராயவும், கட்சியைப் பலப்படுத்தும் அடுத்த நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவும் அவசர சந்திப்பொன்றை ஏற்பாடு செய்துள்ளதுடன், அடுத்த மாகாணசபைத் தேர்தலில் தாம் தனித்து களமிறங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கலந்துரையாடலில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இருக்கும் செல்வாக்கு என்னவென்பதை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அதற்காக அடுத்த மாகாணசபை தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து களமிறங்க வேண்டும் எனவும் கட்சியின் பெரும்பான்மை.தரப்பினர் கட்சித் தலைமையிடம் வலியுறுத்தினர்.

அதனைக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மறுக்கவில்லை எனவும், அடுத்த மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து களமிறங்குவது உறுதியெனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளரும் முன்னாள் செயலாளருமான ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார். (நி-5)

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு; ஆனாலும் மின்சாரம் துண்டிக்கப்படாது

### என்கிறார் எரிசக்தி அமைச்சர்



(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக கூறப்படுகின்ற போதிலும் மின்சார துண்டிப்பு இருக்காது என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் எரிபொருளுக்கு போதிய அந்நியச் செலாவணி இல்லை என்ற பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திற்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிப்புக்காக 50 நாட்களுக்கு மூடுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் இந்தக்காலப் பகுதியில் நாட்டின் மின்சாரத் தேவை நீர் மின் உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் பதிலளித்தார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் திறக்கப்பட்ட பின்னரும் மின் உற்பத்திக்கு கூடுதலாக 40 நாட்களுக்கு போதுமான எரிபொருள் தங்களிடம் உள்ளது என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார். (நி-5)

# பெறுகை அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம்-2021 வேலணை பிரதேச சபை

**வீதி விளக்கு கொள்வனவு செய்தல் ஒப்பந்த இல:- NP/14/41(18)/2/Council/2021/14**

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, சபை நிதியின் ஒரு பகுதியினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு, வேலணைப் பிரதேசசபை, வங்களாவடி வேலணை.தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணத்தில் பகுதி 5 **(Schedule)** இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர்/ செயலாளர், வேலணைப் பிரதேசசபை** (தொலைபேசி: **021 221 1505,** தொலைநகல்: **021 221 1506, மின்னஞ்சல்- velanaips@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2021.11.30ம் திகதியில் இருந்து 2021.12.14 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர்/ செயலாளர்,வேலணைப் பிரதேசசபை,வேலணை எனும் இடத்திலிருந்து 2021.11.30ஆம் திகதியிலிருந்து 2021.12.14 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,500.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்விகள் இரு பிரதிகளில் (மூலப்பிரதி;பிரதி) தயாரிக்கப்பட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, வேலணைப் பிரதேசசபை, வேலணை எனும் முகவரிக்கு 2021.12.14 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்வி இலக்கம் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2021.12.07 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு வேலணை பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.


| கேள்விஎண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் லியன்) (WITH OUTVAT) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு சமர்ப்பித்த இறுதி திகதியில் இருந்து செல்லுபடியாகும் காலம் | | பிணைவைப்பு (ரூ) | |
| | | | | | செல்லுபடியாகும் காலம் | திகதி | பிணை வைப்பு தொகை | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(18) /2/Council/ 2021/14 | 150W Triple eye high power COB LED Street light | 0.503 | 14 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 49 நாட்கள் | 2022.02.01 | 5,100.00 | 2022.03.01 |
| NP/14/41(18) /2/Council/ 2021/14 | 30W LED Street light | 0.433 | 14 நாட்கள் | அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் | 49 நாட்கள் | 2022.02.01 | 1,000.00 | 2022.03.01 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வேலணை பிரதேச சபை, வங்களாவடி.**
**2021.11.30**

(C-3117)

# தடுப்பூசி ஏற்றத்தாழ்வின் பிரதிபலிப்பே புதிய திரிபு

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு



(ஜெனிவா)

**கொவிட் தடுப்பூசி ஏற்றத்தாழ்வின் பிரதிபலிப்பே ஒமிக்ரோன் திரிபு ஏற்படுவதற்கான காரணம் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோரஸ் அதானம் இந்த விடயத்தை தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதில் நீண்ட நாட்களாக நீடித்து வரும் தடுப்பூசி குறித்த உலக அளவிலான ஏற்றத்தாழ்வு நிலைமையை சுட்டிக்காட்டியுள்ள அவர்,

தடுப்பூசி சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கு காலம் தாழ்த்தும் வரையில் கொவிட் வைரஸ் பரவுகையும் புதிய திரிபு உருவாக்கமும் அதிகரிக்கும் ஆபத்து காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஒமிக்ரோன் வைரஸின் பரவுகை, அதன் வீரியம், நோய் அறிகுறிகள், அதன் தாக்கம், தடுப்பூசிக்கான எதிர்வினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## சட்டவிரோத தங்க வேட்டைக்காக அமேசன் நதியில் குவியும் படகு



(பிரேசிலியா)

சட்டவிரோதமாக செயற்படும் தங்கச் சுரங்கங்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான அகழ்வு படகுகள் அமேசனின் மதேரா நதியில் தங்க வேட்டைக்காக குவிந்துள்ளன.

பிரேசிலின் அமேசான் காடுகளில் தங்கச் சுரங்கங்கள் இருப்பதாக வெளியான செய்தியைத் தொடர்ந்து தங்க வேட்டை செய்ய பலர் முயன்றுள்ளனர். கிளாஸ்கோ பருவநிலை மாற்ற மாநாட்டில் அமேசன் மழைக் காடுகளைப் பாதுகாப்பது குறித்து உறுதியளித்துள்ள நிலையில், நூற்றுக்கணக்கான படகுகள் தங்கத்துக்காக அமேசன் நதிகளில் குவிந்துள்ளன. பம்புகள் பொருத்தப்பட்ட மிதவைப் படகுகள் நீண்ட மதேரா நதி முழுவதும் ஆக்கிரமித்துள்ளதாகவும், இவை தங்கத்துக்காக ஆற்றுப் படுகைகளைச் சுரண்டி வெற்றிடமாக்கி வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

300 இற்கும் மேலான படகுகள் இரண்டு வாரங்களாக நதியில் மிதந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பிரேசிலின் கிரீன்பீஸ் செயற்பாட்டாளர் டேனிக்லி அகுயர் தெரிவித்தார். (நி-5)

## 'வேலை வேண்டும்'

## பதாகையுடன் நின்றவருக்கு 3 மணிநேரத்தில் வேலை




(லண்டன்)

வேலை வேண்டும் என்று எழுதப்பட்டிருந்த பதாகையுடன் சுரங்க ரயில் நிலையத்தில் நின்ற இளைஞருக்கு 3 மணி நேரத்தில் வேலை கிடைத்தது.


பாகிஸ்தானைச் சேர்ந்த மெஹ்மூத் மாலிக் என்பவரின் மகன் ஹைதர் மாலிக் (வயது-24) லண்டன் மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தில் பேங்கிங் அன்ட் பைனான்ஸ் பிரிவில் பட்டப் படிப்பு முடித்துள்ளார். ஆனாலும் இவருக்கு தகுந்த வேலை கிடைக்கவில்லை.

இதனால் விரக்தியடைந்த ஹைதர் மாலிக், அண்மையில் லண்டன் கனாரிவார்ஃப் பகுதியிலுள்ள சுரங்க ரயில் நிலையத்துக்குச் சென்றார். அங்கு வெளியில் நின்று கொண்டு எனக்கு வேலை வேண்டும் என்று எழுதப்பட்டிருந்த பதாகையைப் பிடித்துக் கொண்டார். மேலும் அந்தப் பலகையில் கியூஆர் கோட்டையும் உருவாக்கிக் கொண்டார். அதை ஸ்கான் செய்யும்போது, ஹைதர் மாலிக்கின் விபரங்கள் அடங்கிய புரொபைல் கிடைக்கும். முதலில் அவரை சுரங்க ரயில் நிலையத்தில் யாரும் பொருட்படுத்தவில்லை. அதன் பின்னர் தொடர்ச்சியாக அவரது செல்போனுக்கு அழைப்புகள் வந்துகொண்டே இருந்தன. காலை 7 மணிக்கு பதாகையுடன் நின்ற அவருக்கு அடுத்த 3 மணி நேரத்தில் வேலையே கிடைத்து விட்டது.

இது குறித்து ஹைதர் மாலிக் கூறும்போது, "முதலில் இந்த திட்டம் பலிக்காது என்று நினைத்தேன். பின்னர் எனது தந்தையின் விடாமுயற்சி கொள்கையால் ஈர்க்கப்பட்டு இந்த செயலைச் செய்தேன். சில மணி நேரங்களில் நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அழைப்பு வந்தது. 3 மணி நேரத்தில் எனக்கு வேலையே கிடைத்து விட்டது. அதன் பின்னரும் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு எனக்கு அழைப்புகள் வந்து கொண்டே இருந்தன. எனக்காக உதவ முன்வந்த அனைவருக்கும் நன்றி" என தெரிவித்தார். (நி-5)

## சீனாவின் கடன் பொறியில் சிக்கிய உகண்டா

### விமான நிலையத்தையும் இழந்தது



(கம்பாலா)

கடன் ஒப்பந்தத்தில் எந்த சர்வதேச பாதுகாப்பும் இல்லாததால் பிற சர்வதேச அமைப்புகளின் உதவிகளைக் கோர முடியாத நிலையில் உகண்டா உள்ளது. ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள உகண்டா நாடு ஏழ்மையான நிலையில் உள்ளது. அந்த நாடு சீனா விடம் கடந்த 2015 ஆம் ஆண்டு கடன் வாங்கியது. கடனுக்கு ஈடாக உகண்டாவில் உள்ள எண்டெபெ விமான நிலையம் உள்ளிட்ட சொத்துக்கள் சீனாவிடம் அடைமானம் வைக்கப்பட்டது. 207 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் தொகை வழங்கப்பட்டது. ஆனால் கடனை திரும்ப செலுத்த முடியாமல் உகண்டா அரசு திணறி வருகிறது. கடனை செலுத்த முடியாமல் போனால் எண்டெபெ விமான நிலையத்தை சீனா கையகப்படுத்திக் கொள்ளலாம் என்று கடன் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் உள்ள அந்த விதியை நீக்க வேண்டும் என்று உகண்டா அரசு சீனாவிடம் பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் அதனை ஏற்க சீனா மறுத்து விட்டதாக கூறப்படுகிறது. இதனால் உகண்டாவின் ஒரே ஒரு சர்வதேச விமான நிலையம் சீனா வசம் செல்வது உறுதியாகி உள்ளது. கடன் ஒப்பந்தத்தில் எந்த சர்வதேச பாதுகாப்பும் இல்லாததால் பிற சர்வதேச அமைப்புகளின் உதவிகளை உகண்டா கோர முடியாத நிலை உள்ளது. (நி-5)

## பயணத் தடைகளை நீக்குமாறு

### தென்னாபிரிக்க ஜனாதிபதி வேண்டுகோள்

(ஜோகனஸ்பெர்க்)

புதிதாக விதிக்கப்பட்ட பயணக்கட்டுப்பாடுகளால் தாம் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் இது நியாயமற்றது என்றும் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஒமிக்ரோன் வைரஸ் இந்த மாத தொடக்கத்தில் தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டதை அடுத்து கடந்த புதன்கிழமை உலக சுகாதார அமைப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு வாரங்களில் தென்னாபிரிக்காவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணமான கௌதங்கில் கண்டறியப்பட்ட பெரும்பாலான தொற்றுக்களுக்கு இந்த மாறுபாடு காரணம் என கண்டறியப்பட்டது.

இந்த வைரஸ் மீண்டும் தொற்றக் கூடிய அதிக அபாயத்தைக் கொண்டிருப்பதாக கண்டறியப்பட்டதை அடுத்து தென்னாபிரிக்கா மற்றும் அதனை அண்டிய நாடுகளுக்கு இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பயணத் தடைகளை அறிவித்தன.

இந்நிலையில் குறித்த தடைகள் அவசரமாக நீக்கப்பட வேண்டும் என தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா கேட்டுக்கொண்டுள்ளார். (நி-5)

## மன்னார் மாவட்டத்தில்
# 17 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை முழுமையாக பாதிப்பு!

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக 2021 , 2022 ஆம் ஆண்டுகளுக்கான பெரும் போக பயிர்ச் செய்கையில் சுமார் 17,167 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட கமநல திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஏ.மெரின் குமார் தெரிவித்தார்.**

தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 5555 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 2400 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4345 ஏக்கர் , மடு பிரதேச செயலாளர் பிரிவில் 825 ஏக்கர் மற்றும் மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 4042 ஏக்கர் நெற் செய்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்தார்.(4-5-285)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 198 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 25 ஆம் திகதி முதல் பெய்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக 198 குடும்பங்களைச் சேர்ந்த 683 பேர் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

மேலும் 1300 ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளதோடு மின்னல் தாக்கத்தினால் பல இடங்களில் இலத்திரனியல் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-315)

# மகளிடம் சேட்டை விட்டவரின் காதை அறுத்த தந்தை

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் உள்ள வீடொன்றில் உறவினர் இல்லாத சமயம் தனிமையில் இருந்த 12 வயது சிறுமியிடம் நபர் ஒருவர் சேட்டை புரிந்துள்ளார்.

இதனால் குறித்த சிறுமியின் தந்தை சேட்டை புரிந்த நபரின் காதை அறுத்ததுடன் மற்றும் கை, கால் போன்ற இடங்களில் வாளால் வெட்டியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த குறித்த நபர் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த நபரை வெட்டிய குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தையை தருமபுரம் பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-316)

# தாழ்நில கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக தாழ்நிலக் கிராமங்கள் முற்றிலும் நீரில் மூழ்கியுள்ளதுடன் மழை நீர் வடிந்தோட முடியாத நிலை காணப்படுகிறது.

குறிப்பாக மன்னார் பேசாலை, தலைமன்னார் சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன் நகர், மடுக்கரை உட்பட பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. அதேநேரம் மன்னார் மருத்துவமனை பிரதான வீதி எழுத்தூர், தாழ்வுபாடு வீதிகளும் முற்றிலுமாக நீரினால் மூழ்கியுள்ளன. தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நீடித்து வருவதனால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட வாய்ப்புள்ளதுடன் சில பகுதிகளில் கடல்நீர் மட்டம் அதிகரித்து கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (4-5-285)

# உறவுகளைத் தேடி 108 உறவுகள் உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விடுதலையை வலியுறுத்தி அவர்களது உறவுகள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளைத் தேடியலைந்த 108 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு இதுவரை உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 19 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (4-5-299)

# நகை திருடிய பெண் பொலிஸாரிடம் சிக்கினார்


(குருமன்காடு)

வவுனியா, பசார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் நகை திருடிய பெண் ஒருவர் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்ப்ட்டார். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா பசார் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் வியாபார நேரத்தில் 4 பவுண் சங்கிலி ஒன்று திருடப்பட்டுள்ளமை தொடர்பில் அதன் உரிமையாளரால் கடந்த 11 ஆம் திகதி வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் குறித்த நகைக் கடைக்கு சென்று அங்குள்ள சி.சி.ரி.வி. வீடியோவை பார்வையிட்டபோது நகை கொள்வனவு செய்வதற்குச் சென்ற பெண் ஒருவர் நகைகளைப் பார்வையிட்ட போது 4 பவுண் நகை ஒன்றை எடுத்துச் சென்றமை தெரிய வந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்த குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கடுகண்ணாவை பகுதியில் வசிக்கும் 31 வயது பெண் ஒருவரை கைது செய்துள்ளதுடன், அவரிடம் இருந்து 4 பவுண் சங்கிலியையும் மீட்டனர். மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (4-5-250)

# குளங்கள் வான் பாய்வதால் போக்குவரத்து பாதிப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்கள் வான் பாய்வதன் காரணமாக பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். குளங்களின் வான் கதவுகளால் வெளியேறும் வெள்ளம் வீதிகளைக் குறுக்கறுத்து பாய் வதன் காரணமாக போக்கு வரத்தில் ஈடுபடுவோர் மற்றும் மாணவர்கள் பெரும் நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மாவட்டத்தின் பிரதேச மருத்துவமனையில் இருந்து கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் மூலம் நோயாளர்களைக் கொண்டு செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(4-5-350)

# மேய்ச்சல் தரவைக்கான நிலப்பரப்புக்கள் வனவளத் திணைக்களத்தின் பிடியில்

## கால்நடை வளர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று குமுழமுனை பிரதேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.



5,000 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் இப்பிரதேசத்தில் காணப்படுவதாகவும் மேய்ச்சல் தரவை நிலங்கள் இல்லை எனவும் அனைத்து நிலங்களிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துவதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் மாவட்ட செயலகம், பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் மேய்ச்சல் தரவைக்கான நிலங்களை இனங்காட்டுமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதுடன் கால்நடை வளர்ப்பிற்கான மேய்ச்சல் தரவை நிலங்கள் எதிர்காலத்தில் குமுழமுனை பிரதேசத்தில் அமைய வேண்டும் எனவும் குமுழமுனை கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர். குமுழமுனை பிரதேசத்தில் பெருமளவு நிலப்பரப்பு வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளது. இந்நிலங்கள் விடுவிக்கப்படும் போது மேய்ச்சல் தரவை அமைவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனவும் தெரிவித்தனர். (4-5-350)

# மேலும் பல ஊழல் மோசடிகளை விரைவில் வெளிப்படுத்துவேன்

## நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர்



(கொழும்பு)

ஊழல்-மோசடிகள் குறித்த மேலும் பல தகவல்களை நான் வெளியிடுவேன். அந்த அனைத்துத' தகவல்களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கவுள்ளேன் எனவும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் துஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

பல அமைச்சுக்களில் இடம் பெற்ற சட்டவிரோதச் செயற்பாடுகள் காரணமாகவே நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து தான் விலகியதாக கடந்த சனிக்கிழமை நடந்த ஊடக சந்திப்பின்போது ,அவர் தெரிவித்தார்.

இரண்டு வெள்ளைப்பூடு கொள்கலன்கள் சட்ட விரோதமாக வெளியேற்றப்பட்டமை உட்பட பல அதிர்ச்சிச் சம்பவங்களை அவர் வெளிப்படுத்தியதால் அரசியல் ரீதியாக அழுத்தம் கொடுக்கப்பட்டதாகத் தெரிவித்து, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருந்து அவர் விலகினார்.

எரிவாயு சிலிண்டர்களில் செய்யப்படும் கலவை மாற்ற மோசடியால் அவை வெடித்துச் சிதறும் அபாயம் உள்ளதாகவும் இதனால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து உள்ளதாகவும் அவர் அண்மையில் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## செல்வம் தரும் லட்சுமி குபேர வழிபாடு



அகிலாண்ட நாயகியின் பேரொளியால் அவனது இட்து கண் வெடித்து தெறித்தது. குபேரன் மனம் வருந்தி பார்வதி தேவியிடமும், சிவபெருமானிடமும் மன்னிப்பு கேட்டான். அறியாமல் செய்த பிழைக்காக சிவனும், பார்வதியும் குபேரனை மன்னித்தார்கள். 'உனக்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார் இறைவன்.

'ராவ்ணனால் செல்வம் அனைத்தையும் இழந்து காட்டில் வசிக்கிறேன். என் செல்வத்தையாவது மீட்டு தாருங்கள்' என்று குபேரன், சிவபெருமானிடம் வேண்டினான்.

சிவபெருமான் உலகத்து செல்வம் முழுவதையும் அவனிடம் ஒப்படைத்து, உழைக்கின்ற மக்களுக்கு அவரவர் விதிப்பயனுக்கு ஏற்ப கொடுத்து வர கட்டளையிட்டார். மகாவிஷ்ணுவின் மனைவியான மகாலட்சுமி எட்டு விதமான சக்திகளை பெற்றாள். தனம், தானியம், சந்தானம் உள்ளிட்ட எட்டு வித சக்தி பெற்ற இவரது சக்திகள் அனைத்தையும் சங்க நிதி, பதும நிதி என்பவர்களிடம் ஒப்படைத்தாள். இவர்களை தன் கணக்குப் பிள்ளையாக நியமித்துக் கொண்டார் குபேரன். அவர்கள் குபேரனின் இருபுறமும் அமர்ந்தனர்.

குபேரன் அருளாட்சி நடத்த, அழகாபுரி என்ற பட்டினத்தை விசுவக்ர்மா உருவாக்கி கொடுத்தார். அங்கு அரண்மனையில் ஒரு ஆசனத்தில் தாமரை மலர் ஏந்தி, மீன் ஆசனத்தில் போடப்பட்ட, பட்டு மெத்தை மீது அமர்ந்து குபேரன் ஆட்சி செலுத்தி வந்தான்.

இவரது வலதுபுறத்தில் சங்க நிதியும், இடது புறத்தில் பத்ம நிதியும் அமர்ந்து இருப்பார்கள். சங்க நிதி கையில் சங்கு வைத்திருப்பார். இவர் தான் குபேரனிடம் செல்வம் பெற அனுமதி கொடுப்பார். இவரது கை வரத முத்திரை தாங்கி இருக்கும். தாமரையும், சங்கும் செல்வத்தின் அடையாளங்கள் ஆகும்.

தீபாவளி அன்று இரவில் குபேரனை விசேஷமாக, தங்க, வெள்ளி நாணயங்களை வைத்து வழிபடும் பழக்கம் உள்ளது.

'ஓம் ய க்ஷய குபேராய
வைஸ்ரவணாய
தந தா நியாதி பதயே
தந்தாந்ய ஸம்ருத்திம்மே
தேவி தாபய ஸ்வாஹா'

என்ற குபேரனின் மந்திரத்தை தியானித்து அவனை வழிபட வேண்டும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## கடமைகளைப் பொறுப்பேற்றார் புதிய பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

புதிய பரீட்சை ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள எல்.எம்.டி. தர்மசேன பெலவத்தவிலுள்ள பரீட்சைகள் திணை க்கள வளாகத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் புதிய ஆணையாளர் நாயகம் நேற்றுக் காலை கடமைகளை ஆரம்பித்தார். (நி-5)

## 23 கிலோ வெடி பொருட்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

அனுமதிப்பத்திரமின்றி பொட்டாசியம் நைட்ரேட் வெடி பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், கட்டான - களுவாரிப்புவ பிரதேசத்தில் வைத்து 54 வயது இச்சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இந்நபரிடமிருந்து 23 கிலோவுக்கும் அதிகமான பொட்டாசியம் நைட்ரேட் வெடிபொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும், குறித்த சந்தேகநபரின் வீட்டில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில், கூரிய ஆயுதங்கள், வாள் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## யுகதனவி ஒப்பந்தம்; மனு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

யுகதனவி ஒப்பந்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை எதிர்வரும் 16 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இதன்போது குறித்த மனுக்களை எதிர்வரும் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 380 | 400 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 350 | 250 |
| தக்காளி | 500 | 550 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 200 | 330 | 320 | 350 |
| கரட் | 260 | 340 | 320 | 350 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 280 | 280 | 240 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 240 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 500 | 580 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 260 | 200 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 150 |
| பயற்றங்காய் | 600 | 500 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 280 | 320 | 350 |
| பீற்றூட் | 120 | 160 | 140 | 200 |
| கறிமிளகாய் | 500 | 450 | 600 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | -- | 800 |
| போஞ்சி | 320 | 300 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | 320 | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 90 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 240 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 160 | -- | 250 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 25 | 250 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | -- | 160 |

# கொரோனாவின் புதிய பிறழ்வு நாட்டிற்குள் வருவதை தடுக்க முடியாது

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**புதிதாக கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் எனப்படும் புதிய கொரோனா மாறுபாடு நாட்டிற்குள் வருவதை தடுக்க முடியாது என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.**

புதிய மாறுபாடு நாட்டிற்குள் நுழையாமல் இருப்பதை உறுதி செய்ய அதிகாரிகள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்தது போல் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர், கலாநிதி பத்மா குணரத்ன தெரிவித்தார்.



புதிய மாறுபாட்டின் நுழைவு தாமதமாகலாம் என்றாலும், அது ஒருபோதும் நாட்டிற்குள் நுழையாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் அவர் எடுத்துரைத்தார்.

எவ்வாறாயினும் சுகாதார விதிகளை கண்டிப்பாக கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும் சரியான நேரத்தில் தடுப்பூசி போடுவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார். (நி-5)

# பொருளாதார பாதிப்பு ராஜபக்ஷக்களைப் பாதிக்காது

## நடுத்தர மக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாகும் என்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

ஜனநாயக கொள்கைக்கு முரணான நிர்வாகத்தின் காரணமாக சர்வதேசம் இலங்கையை புறக்கணிக்க ஆரம்பித்து விட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க திடுக்கிடும் தகவலை தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற 43 ஆவது படையணி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

டொலர் பிரச்சினை பல்வேறு மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்திடம் உள்ள 1.5 பில்லியன் கையிருப்பு தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்காது. டொலர் பிரச்சினை காரணமாக சமூகத்தில் கறுப்பு சந்தை தோற்றம் பெற்றுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. அதன் காரணமாக உணவுப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. பொருட்களின் விலையை தீர்மானிக்கும் அதிகாரத்தை வர்த்தகர்கள் கையிலெடுத்துள்ளார்கள்.

2022 ஆம் ஆண்டு 7 ஆயிரம் மில்லியன் அரச முறை கடன் செலுத்தப்பட வேண்டும். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் அந்நியசெலாவணி நூற்றுக்கு ஐம்பது வீதம் குறைவடைந்துள்ளது.

அரச முறை கடன்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் கடன் கிடைக்காத போது வரையறையற்ற வகையில் நாணயம் அச்சிடப்படுகிறது. வெளிநாட்டுக் கடன் கிடைக்காத போது டொலர் கையிருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு பொருள் இறக்குமதி தடை செய்யப்படுகிறது.



நாணயம் அச்சிடுவதற்கும் பொருள் இறக்குமதி தடை செய்வதற்கும் படித்து பட்டம் பெற வேண்டிய அவசியமில்லை. தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையின் காரணமாக நாடு கட்டம் கட்டமாக அழிவை நோக்கி செல்கிறது.

பொருளாதார பாதிப்பு ராஜபக்ஷர்களுக்கு எவ்விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தாது. இந்த சூழ்நிலை தொடர்ந்தால் நடுத்தர மக்களின் வாழ்க்கை கேள்விக்குள்ளாக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கட்டுநாயக்க விமான நிலைய சுகாதார வழிமுறைகள் தளர்வு நிலையில்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அதிருப்தி

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மிகவும் தளர்வான சுகாதார வழிகாட்டல்களே பின்பற்றப்பட்டு வருவதாகவும் பரிசோதனைகளை தவிர்த்து பயணிகள் வெளியேறக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இதனால் ஆபிரிக்க நாடுகளில் பதிவான ஒமிக்ரோன் திரிபு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நாட்டை தாக்கக் கூடும் என எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன் நாட்டில் தொற்றுறுதியாளர்கள் மற்றும் மரணங்கள் பதிவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போக்கினை அவதானிக்க முடிகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுகாதார நடைமுறைகள் மெத்தனப்போக்கில் பின்பற்றப்படுகின்றன.

இதனால் புதிய திரிபில் தாக்கப்பட்ட பயணிகள் எவரும் நாட்டுக்குள் பிரவேசிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

மக்களின் உயிர்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதுடன் கொவிட் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் ஒமிக்ரோன் திரிபினை அடையாளம் காண முடியும் எனவும் உபுல் ரோஹண தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## பிடிவாதக்காரர்களை மாற்றும் விதம்

கண்ணில் துணியைக் கட்டிக்கொண்டு கிணற்றில் விழுபவர்களை நாம் தடுத்து நிறுத்தாமல் இருப்போமா?

அது போல பிடிவாதம் எண்ணும் துணியைத் தம் அறிவுக் கண்களின் மீது கட்டிக்கொண்டு பயங்கரமான பின் விளைவுகள் என்னும் கிணற்றில் விழுபவர்களையும் நாம் தடுத்தி நிறுத்தியே ஆக வேண்டும்.

சண்டை பிடித்துக் கொண்டிருக்கும் இருவரை தடுத்து நிறுத்தப் போகும் நடுவருக்கு என்றும் மிஞ்சுவது பொல்லாப்பும் பாதிப்பும் தான். பிடிவாதக்காரர்களை மாற்ற முயல்பவர்களுக்கும் இத்தகைய சோதனைகள் ஏற்படத்தான் செய்யும்.

ஆனாலும் நட்பை யும் நல்லுறவையும் எண்ணி ஒரு நாள் நம் நல்ல நோக்கம் புலப்படும் என்ற நம்பிக்கையில் அவர்கள் இதைச் செய்ய முன்வர வேண்டும்.

பிடிவாதக்காரர்கள் தாங்கள் பிடிவாதமாக இருக்கும் ஒரு கருத்தைச் சொன்னதும் அல்லது செய்யப் போகும் செயலைச் சொன்னதும் உங்கள் எண்ணமும் செயலும் தவறு என்று உடனே ஒரேயடியாக மறுத்துவிடக் கூடாது.

அப்படி மறுத்தால் அவர்களது பிடிவாதம் மேலும் இறுகுமே தவிர தளராது.

முதலில் அரைகுறை மனத்துடன் அவர்களது முடிவை சரியானது என்பதாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பின்னர் மெல்லப் புதிர் போட வேண்டும். அவர்கள் மேற்கொண்டிருக்கும் பிடிவாதச் செயலினால் ஏற்படக்கூடிய கெடுதல்களை அவர்களே உணரும் வண்ணம் சில சிக்கலான கேள்விகளைக் கேட்க வேண்டும்.

தங்களது தவறான முடிவினால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து நம்முடைய முடிவு சரியானதுதானா? என்று அவர்களே சரியான முடிவுக்கு வர முடியாத இக்கட்டான சூழ்நிலைக்கு அவர்களைக் கொண்டு போய் விட வேண்டும்.

அப்படி அவர்கள் குழம்பிப் போய் இருக்கும் நேரத்தில் அவர்களது முடிவும் செயலும் தவறானது என்பதை மேலும் நிலைநாட்டும் வகையில் இந்த பிடிவாதத்தால் ஏற்படக்கூடிய தொல்லைகளையும் சிக்கல்களையும் நிலவி வரும் சூழ்நிலைகளையும் பட்டுப்பட்டென்று தூக்கிப்போட்டுத் தேங்காய் உடைக்கின்ற மாதிரி உடைக்க வேண்டும்.

இவற்றிற்கிடையே அவர்கள் மீது உள்ள அக்கறை காரணமாகவும் தான் நீங்கள் இந்த விடயத்தில் தலையிடுகிறீர்கள் என்பதையும் வேறு எந்த உள்நோக்கத்துடனோ சுயநலத்துடனோ இச் செயலில் இறங்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்திவிட வேண்டும்.

இப்படி மாற்ற முயல்பவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் சொல்லலாம்.

ஒரு பெரும் பாறையைத் தகர்க்க வேண்டுமானால் அதன் மீது ஒரு குண்டினைத் தூக்கி எறிவதை விட அப்பாறையை மெல்லக் குடைந்து உள்ளே அந்தக் குண்டினை நுழைத்து பின்பு அதை வெடிக்கச் செய்வது தான் புத்திசாலித்தனமான செயலாகும்.

பிடிவாதக்காரர்களைக் கட்டாயத்தின் பெயரிலோ அதிகாரத்தின் பெயரிலோ மாற்ற முயல்வதை விட அவர்களாகச் சிந்தித்து நல்ல முடிவுக்கு வரும்படியான மனமாற்றத்தை ஏற்படுத்துவதே வரவேற்கத்தக்க முயற்சியாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## ஆறாவது முட்டாள்

அரசர் கிருஷ்ண தேவராயருக்கு அன்று விபரீதமான ஓர் ஆசை ஏற்பட்டது. அவர் அப்பாஜியிடம், "அமைச்சரே, இன்று மாலை ஆறு மணிக்குள் நம் தலைநகரான விஜய நகரை நீர் நன்றாகச் சுற்றிப் பார்த்து, ஆறு முட்டாள்களின் விலாசத்தைக் குறித்துக் கொண்டு வாருங்கள்" என்று ஆணையிட்டார்.

"முட்டாள்களின் முகவரி எதற்கு?" என்று பணிவுடன் கேட்டார் அப்பாஜி.

"வீணாக விளக்கம் கேட்க வேண்டாம். சொன்னதைச் செய்யும்!" என்று அரசர் கண்டிப்பாகக் கூறினார்.

அரசர் விருப்பப்படி முட்டாள்களைத் தேடி அலைந்தார் அப்பாஜி. அந்தி நேரத்திற்குள் ஆறு முட்டாள்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் விலாசத்தைக் குறிக்க வேண்டுமே! எங்கே போவது? எப்படி முட்டாள்களைச் சந்திப்பது?

அப்பாஜி இரண்டு மணி நேரம் மாறு வேடமணிந்து முட்டாள்களைத் தேடினார். யாரையும் காணோம். நகர எல்லையை ஒட்டிய மரத்தின் நிழலில் சிறிது நேரம் நின்றார்.

அப்போது ஒருவன் கழுதை மீது ஏறி வந்தான். அவன் தலை மீது ஒரு புல்கட்டினைச் சுமந்து கொண்டிருந்தான்.



"ஐயா, கழுதை மீது இருக்கும் நீர் ஏன் புல்கட்டினைச் சுமந்து கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார் அப்பாஜி.

"உமக்கு அறிவு இருக்கா? என் கழுதைக்கு வயதாகிவிட்டது. ரொம்பவும் தளர்ந்து விட்டது. அதனால், என்னை மட்டுமே சுமக்க இயலும்.


இந்தப் புல்கட்டினையும் சேர்த்துச் சுமக்க இயலாது. ஆகவே, நான் புல்கட்டினைச் சுமந்து செல்கிறேன்" என்றான்.

அப்பாஜிக்கு ஒரே மகிழ்ச்சி. தான் தேடி வந்த முட்டாள்களில் ஒருவன் அகப்பட்டுக் கொண்டானே! அவனிடம் சாமர்த்தியமாகப் பேசி அவனது விலாசத்தைக் கேட்டுக் குறித்துக் கொண்டார்.

(தொடரும்)

# மகாபாரதம்

259



அடுத்து வசிஷ்டர் "நான் யாவரினும் சிறந்து இருப்பதாலும், சப்தரிஷி மண்டலத்தில் வசிப்பதாலும் எனக்கு வஷிஷ்டர் என்ற பெயர்" என்றார். இந்தப் பெயரையும் நினைவில் கொள்ள முடியவில்லை. நீரும் போய் குளத்தில் இறங்குக" என்றாள் யாதுதானி.

இது போலவே பரத்வாஜர், காச்யபர், கௌதமர், ஜமதக்னி, விசுவாமித்திரர், பசுசகன்..என அனைவரும் தங்கள் பற்றிக் கூற எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியவில்லை என குளத்திலிறங்கச்சொன்னாள் யாதுதானி.

அருந்ததியும், "நான் என் கணவரின் கருத்துப் படி நடப்பவள். மேலும் எல்லாப் பொருளையும் தாங்குவதும், காப்பதுமாகிய இப்பூமியில் நான் என் கணவரை எப்போதும் சார்ந்திருப்பதால், எனக்கு அருந்ததி என்னும் பெயர் அமைந்தது" என்றாள்.

அப்பெயரையும்நினைவில் வைத்துக் கொள்ள இயலாத யாதுதானி அவளையும் குளத்தில் இறங்கச் சொன்னது. கடைசியாக சுனஸ்ஸகன் யாதுதானியிடம் வந்தான்.

சுனஸ்ஸகன் யாதுதானி என்னும் அந்தப் பேயை நோக்கி, "நான் நாய்களுக்கு எப்போதும் துணைவனாவேன். இவர்கள் கூறியது போல என் பெயரைப் பகுத்துக் கூறமுடியாது" என்றான்.

யாதுதானி அவனிடம் "உம் பேச்சு தெளிவாக இல்லை. உச்சரிப்பும் சரியாக இல்லை. ஆதலால் இன்னொரு முறை உம் பெயரைச் சொல்லவும்" என்றாள்.

நான் ஒரு போதும் கூறியதை திரும்பக் கூறமாட்டேன் என்று கூறியவாறு சுனஸ்ஸகன் திரிதண்டத்தால் அந்தப் பேயை ஓங்கி அடித்துக் கொன்றான். திரிதண்டத்தை பின்தரையில் ஊன்றித் தரையில் அமர்ந்தான்.

பின் அனைத்து ரிஷிகளும் தாமரைக் கிழங்குகளையும், தாமரை மலர்களையும் வேண்டிய அளவு எடுத்துக் கொண்டு குளக்கரையில் ஏறினர்.

பின் தரையில் அவற்றை வைத்து விட்டு தண்ணீரில் இறங்கி தர்ப்பணம் செய்தனர். கரை எறி பார்க்கையில் தாமரைக் கிழங்கு களைக் காணவில்லை. "எந்தப் பாவி கிழங்குகளை எடுத்துப் போனானோ" என வருந்தினர். ஒருவர் மீது ஒருவர் சந்தேகம் கொண்டனர்.

அத்ரி, "தாமரைக் கிழங்கை திருடிச் சென்றவன் பசுவைக் காலால் உதைத்தவன் ஆவான்! காலமல்லாத காலத்தில் வேதம் ஓதியவன் ஆவான்.

நாய்களை இழுத்துச் செல்லும்இழிநிலையை அடைவான். சந்நியாசம் ஏற்றும், காமத்தை விடாத போலித் துறவி ஆவான். அடைக்கலம் அடைந்தவனைக் கொன்ற பாவி ஆவான்" என்றார்.

காச்யபர், "தாமரைக் கிழங்கைத் திருடியவன் எல்லோரிடமும் எல்லாவற்றையும் பேசும் நாவடக்கம் அற்றவனாவான். அடைக்கலப் பொருளை அபகரித்துக் கொள்பவனாவான். பொய்ச்சாட்சி சொல்பவன் ஆவான். புலால் உண்ணும் பாவத்தைச்செய்பவனாவான்" என்றார்.

ஜமதக்னி, "தாமரைக் கிழங்கைத்திருடியவன் தண்ணீரை மாசுபடுத்தியவன்ஆவான். பசுவை அடித்துத் துன்புறுத்திய பாவிஆவான். காலம் அல்லாத காலத்தில்மனைவியைப் புணர்ந்தவன் ஆவான். எல்லோரையும் பகைத்தவன்ஆவான்" என்றார். (தொடரும்)

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்!
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அச்சத்தோடு வாழுகின்ற அவலநிலை தீராதோ!

காலம் எப்படி மாறும் என்பதை எவரும் கணக்கிட முடியாது.

ஆம், ஒரு கணப்பொழுதில் எல்லாம் நடந்து விடக்கூடியதுதான் இப்பூவுலகம்.

முன்பெல்லாம் உறங்கும் வேளையிலும் விழித்தெழும் போதும் என்ன நடக்குமோ ஏது ஆகுமோ என்ற ஏக்கம் தமிழ் மக்களைச் சூழ்ந்திருந்தது.

அது போர்க்காலச் சூழல். யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்தும் தமிழர் தாயகத்துக் கடற்பரப்பில் தரித்து நிற்கும் போர்க்கப்பல்களில் இருந்தும் படைமுகாமில் இருந்தும் தமிழர் வீடுகளை நோக்கி ஏவப்பட்ட குண்டுகளுக்குப் பலியாகிப்போன அப்பாவித் தமிழ் மக்கள் கொஞ்சமல்ல.

உண்மை. யாழ்ப்பாணக் கோட்டையில் - பலாலி படைத்தளத்தில் இருந்து ஏவப்பட்ட ஷெல் வீச்சில் உயிரிழந்துபோனவர் ஏராளம்.

அத்தோடேனும் ஈனர்களின் நரபலி நின்றபாடில்லை.

போதாக்குறைக்கு விமானத்தில் இருந்து குண்டு போடுவதும் உலங்குவானூர்தியில் இருந்து வேட்டு வைப்பதும் தமிழர் உயிர்களைக் காவு கொள்வதற்கு நடந்த சங்கதிகள்.

இந்த நிட்டூரத்தைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மறந்துவிட மாட்டார்கள்.

திருமண மண்டபத்தில் குண்டு வீழ்ந்து வெடித்ததில் மணமகன் அதே இடத்தில் துடிதுடித்துப் பலியான சம்பவம் மறப்பதற்குரியதா?

இவை கடந்து, வன்னியில் நடந்த கொடூரங்கள் கொஞ்சமா?

ஆக, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமையை தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். மறக்கவும் மாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை ஒருபுறமிருக்க, இப்போது நாடு பூராகவும் மக்கள் அச்சத்துடனும் அவலத்துடனும் வாழுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளமைதான் இங்கு கவனிக்கத்தக்கது.

அந்தோ! பொருட்களின் விலைகள் எகிறுகின்றன.

தேநீர், பாண், பணிஸ் என்ற ஏழைகளின் உணவுப் பண்டங்களும் வானுயர்ந்த விலையில் வாய்க்குக் கிட்டாமல் எட்டிக் கிடக்கின்றன.

இதற்கு மேலாக, எரிவாயு சிலிண்டர்கள் எந்த நேரம் வெடித்துச் சிதறுமோ என்ற ஏக்கம்.

என்ன செய்வது மனிதநேயம் இல்லாதவர்கள் அரண்மனை ஏறிநின்றால்; இதுவல்ல இதற்கு மேலாகவும் அக்கிரமம் நடக்கும் என்ற நிலையில்,

கொரோனாத் தொற்றும் அதன் திரிபுகளும் மானிடத்து உயிர்களைக் கொத்திச் செல்ல வட்டமிடுகின்றன.

இந்தநேரத்தில் ஏக்கத்தோடு விழித்து ஏக்கத்தோடு உறங்குவதுதான் இந்த நாட்டு மக்களின் விதியாயிற்று.

இந்நேரத்தில், அம்மா பசிக்குது என்றழும் சின்னஞ்சிறுசுகளின் துடிப்பு ஏழைத் தாயின் இதயத்தை அறுத்தெடுக்கிறது.

அந்தோ! என் செய்வோம் என்ற நிலை எப்போது தீருமோ யார் அறிவார்.

# "ஒமிக்ரோன்" அச்சுறுத்தல் அபாயகரமானது சுகாதார வழிமுறைகளைக் கடினப்படுத்துக

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

(கொழும்பு)

"ஒமிக்ரோன்" கோவிட் -19 வைரஸ் பிறழ்வு குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் அச்சுறுத்தல் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், இலங்கைக்குள் உள்நுழையும் சகல பயணிகள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும் எனவும் சுகாதார வழிமுறைகளை உடனடியாக கடுமையாக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் அவசர கால நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் முன்வைத்த விசேட கூற்றின்போதே இதனைச் சுட்டிக்காட்டினார்.

அவர் இது குறித்து கூறுகையில், இம்மாதம் 26 ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனம் அவசர கூட்டமொன்றை கூட்டி "ஒமிக்ரோன்" கொரோனா வைரஸ் குறித்து அவதானம் செலுத்தியுள்ளது. இந்த வைரஸ் குறித்து கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு முன்னர் "லம்டா" "எப்சிலோன்" மற்றும் "மூ" ஆகிய பிறழ்வுகள் குறித்தும் அவர்கள் இவ்வாறான முக்கியத்துவம் கொடுக்காத போதிலும் அல்பா, பீட்டா, கெமா மற்றும் டெல்டா வைரஸ்களுக்கு விசேட அடையாளங்கள் இருப்பதால் அவற்றை கருத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர்.

இப்போது "ஒமிக்ரோன்" வைரஸ் இதே அச்சுறுத்தல் நிலையில் உள்ள காரணத்தினால் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-3)

### பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்

## பிறந்து 4 நாட்களேயான சிசுவிற்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிறந்து 4 நாட்களேயான ஆண் சிசு ஒன்றுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வடமராட்சி - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்ட 7 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவ்வாறு பச்சிளம் குழந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## எரிவாயு விலையை நிர்ணயிக்க விலைச் சூத்திரம்

(கொழும்பு)

எரிவாயுவிற்கு விலைச் சூத்திரம் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட லாப்ஸ் நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ.கே.எச். வேகபிட்டிய இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய கணிப்புகளின்படி, அடுத்த மாதம் எரிவாயு விலை ஓரளவுக்கு குறையும் எனவும் அதன்படி, அடுத்த சில மாதங்களில் விலை மேலும் குறையும் என தாங்கள் எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிவாரணம் பெறும் முதல் மாதத்தில் இருந்து எங்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு விபத்துக்கள் ஏற்பட்டால் தங்களிடம் காப்பீடு ஒன்றும் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## மட்டக்களப்பில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வவுணதீவு வாழைக்காடு சந்தியில் வான் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை இடம்பெற்ற இந்த விபத்து சம்பவம் தொடர்பில் வானின் சாரதியை கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய மைலப்போடி சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-3)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
-தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## நம்மால் சாதிக்க முடியும்

❖ நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அதன் பொருட்டு மனம், இதயம், ஆன்மா இந்த மூன்றையும் அர்ப்பணித்து விடுங்கள்.

❖ உயர்ந்த லட்சியம் கொண்டவன் ஆயிரம் தவறு செய்தால், லட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வான்.

❖ நாம் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் கொண்டவர்கள். மகத்தான செயல்களைச் செய்வதற்காகவே ஆண்டவன் நம்மைப் படைத்து இருக்கிறான். அவற்றை நாம் விரைந்து செய்து முடிப்போம்.

❖ நல்ல எண்ணங்களின் கருவிகளாக்கிக் கொள்ளும் முயற்சியில் மனதை எப்போதும் ஈடுபடுத்துங்கள்.

❖ சரியான வழியில் செலுத்தப்பட்ட மனம் நம்மைக் காக்கும். இறுதியில் நம்மை விடுதலை பெறச் செய்யும்.

❖ தூய உள்ளம் படைத்தவர்கள் அதிகமானால், இந்த உலகமும் தூய்மை பெற்றதாக மாறி விடும்.

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

25

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**உரு 18A கிரேக்க எண் முறை உதாரணங்கள்**

(1) γϡμβ = (3x1000+900+40+2) = 3942

(2) χξϝ = (600+60+6) = 666

(3) τμζ = (300+40+7) = 347

(4) 2347 = (2000+300+40+7) = ͵βτμζ

**கொப்டிக் எண் முறைமை** (Coptic numerals) **(4 ஆம் நூற்றாண்டு).**

கொப்டிக் எண்கள், கொப்டிக் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட எண் முறைமைக் குறியீடுகள் ஆகும். எகிப்தின் எண் முறைமையில், முன்னர் கூறியது போல ஹைறோகிளிஃபிக் எண்கள் (hieroglyphic numerals) பண்டைய எகிப்தில் பயன்படுத்தப்பட்ட எண் குறியீட்டு முறை ஆகும்.

ஹைறோகிளிஃபிக் எண் குறியீட்டு முறையிலிருந்து, எகிப்திய எழுத்தாளர்கள் படிநிலை எண் முறைமைகளை (hieratic numerals) கி.மு. 2600 இல் உருவாக்கினர் இதன் அடிப்படையில் பின்னர், டெமோடிக் (Demotic) எண் முறைமை உருவாக்கினார்கள்.

எழுத்துக்களில் சேர்வு ஏற்படுத்தவும் எழுதுவதை எளிதாகவும், நிர்வாக மற்றும் இலக்கிய நோக்கங்களுக்காகவும் பொருத்தமானதாக மாற்றும் நோக்கத்துடன் ஹைறோகிளிஃபிக் எண் முறைமையிலிருந்து படிநிலை எண் முறைம்ம உருவாக்கப்பட்டது.

இதனை டெமோடிக் எண் முறைமை மேலும் எளிமைப்படுத்தியது. இந்த இரண்டு வகையான எண்கள், அவை இரண்டும் ஹைறோகிளிஃபிக் அமைப்பிலிருந்து நேரடியாக வந்திருந்தாலும் செயற்பாடு மற்றும் கட்டமைப்பில் ஒன்றிலிருந்து ஒன்று கணிசமான அளவு வேறுபடுகின்றன.

கி.மு.நான்காம் நூற்றாண்டில் (கி.மு.332), அலெக்சாண்டர் எகிப்தை ஆக்கிரமித்தபின், கிரேக்கர்கள் ஒரு புதிய எண்ணிக்கையிலான குறியீட்டு முறையை உருவாக்கினர். இதுவே கிரேக்க எண் முறைமையாகும். இது எகிப்திய எண் முறைமையை விட மேலும் சில நன்மைகளைக் கொண்டிருந்தது. எகிப்திய எண் முறைமையை ஒன்றைக் காட்டிலும் கிரேக்க முறைமையின் முக்கிய நன்மை: குறைவான குறியீடுகள் மற்றும் மிகச் சிறிய எண்கள், இது கிரேக்க அகர வரிசை எண் அமைப்பை எகிப்திய அமைப்பை விட மிகவும் நடைமுறை மற்றும் பயன்படுத்த மிகவும் எளிதாக்குகிறது.

கி.மு. 332 இல் எகிப்தின் மீது கிரேக்க ஆக்கிரமிப்புடன், கிரேக்க மொழி நிர்வாகத்தின் உத்தியோக பூர்வ மொழியாக மாறியது, படிப்படியாக, எகிப்திய மொழியை அதன் ஹைரேடிக் அல்லது டெமோடிக் எழுத்துக்கள் குறைமதிப்பிற்கு உள்ளானது. நான்காம் நூற்றாண்டிலேயே, எகிப்தியர்கள், கிரேக்க எழுத்துக்களைப் பயன்படுத்தி தங்கள் சொந்த மொழியை எழுதத் தேர்ந்தெடுத்தனர்.

எனவே டெமோடிக் எழுத்தைக் கைவிட்டனர். அவர்கள் இருபத்தி நான்கு கிரேக்க எழுத்துக்களை ஏற்றுக்கொண்டனர், ஆனால் எகிப்திய மொழியில் காணப்படும் சில சொற்களின் ஒலிப்புகளை (phonetic sounds) வெளிப்படுத்த கிரேக்க எழுத்துக்கள் எதுவும் கிடைக்காததால் டெமோடிக்கிலிருந்து ஏழு எழுத்துக்களை தக்க வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

**கி.மு. 332 இல் எகிப்தின் மீது கிரேக்க ஆக்கிரமிப்புடன், கிரேக்க மொழி நிர்வாகத்தின் உத்தியோகபூர்வ மொழியாக மாறியது, படிப்படியாக, எகிப்திய மொழி குறைமதிப்பிற்கு உள்ளானது. எகிப்தியர்கள் கிரேக்க எழுத்துக்களைப் பயன்படுத்தி தங்கள் சொந்த மொழியை எழுதத் தொடங்கினர். அவ்வெழுத்துக்களுடன் தங்கள் ஏழு எழுத்துக்களையும் சேர்த்து உருவானதையே கொப்டிக் எழுத்துக்கள் எனவும் இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட எண் முறைமை கொப்டிக் எண் முறைமை எனவும் அழைக்கப்படுகிறது.**

இதுவே கொப்டிக் எழுத்துக்கள் (Coptic letters) எனவும் இவ்வெழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட எண் முறைமை கொப்டிக் எண் முறைமை (Coptic numerals) எனவும் அழைக்கப்படுகிறது. உரு-19 ஐப்பார்க்க. (6085 எனும் எண்ணுக்கு 6000 இற்குரிய குறியீடும் அதனை அடுத்து 80இற்குரிய குறியீடும் 5 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றது.)

இது கிரேக்க எண் முறைமை ஒத்த ஒரு முறைமையாகும். ஆனால் சிரிலிக் எழுத்தில் உள்ளது. இவ் அமைப்பில் 11,12 போன்ற இலக்கங்கள் எழுதும் விதத்திலும் 21, 22 போன்ற இலக்கங்கள் எழுதும் விதத்திலும் சிறு வேறுபாடு உண்டு. அதாவது 11 ஆனது ஒன்றுக்கான குறியீட்டை அடுத்து பத்துக்கான குறியீடு எழுதப்படும். 21 ஆனது 20 இற்கான குறியீட்டை அடுத்து ஒன்றுக்கான குறியீடு எழுதப்படும். 21,31,41 போன்றவை ஒரேமாதிரியாக எழுதப்படுகின்றன. இதன் அமைப்பை உரு-20 காட்டுகிறது.

(319 எனும் எண்ணுக்கு 300 இற்குரிய குறியீடும் அதனை அடுத்து 19 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றது. 988 எனும் எண்ணுக்கு 900 இற்குரிய குறியீடும் அதனை அடுத்து 80 இற்குரிய குறியீடும் 8 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றது).

**உரு 19 கொப்டிக் எண்முறைமை (Coptic numerals)**

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1s | ⲁ̄ | ⲃ̄ | ⲅ̄ | ⲇ̄ | ⲉ̄ | ⲋ̄ | ⲍ̄ | ⲏ̄ | ⲑ̄ |
| 10s | ⲓ̄ | ⲕ̄ | ⲗ̄ | ⲙ̄ | ⲛ̄ | ⲝ̄ | ⲟ̄ | ⲡ̄ | ϥ̄ |
| 100s | ⲣ̄ | ⲥ̄ | ⲧ̄ | ⲩ̄ | ⲫ̄ | ⲭ̄ | ⲯ̄ | ⲱ̄ | ϣ̄ |
| 1000s | ⲁ̱̄ | ⲃ̱̄ | ⲅ̱̄ | ⲇ̱̄ | ⲉ̱̄ | ⲋ̱̄ | ⲍ̱̄ | ⲏ̱̄ | ⲑ̱̄ |

**உதாரணங்கள்** 6085= ⲋ̱̄ⲡⲉ ; ⲅ̱̄ⲩ̄ⲍ̄ = 3407

**சிரிலிக் எண் முறைமை** (Cyrillic numerals) **(10 ஆம் நூற்றாண்டு).**

சிரிலிக் எண்கள் என்பது சிரிலிக் எழுத்திலிருந்து பெறப்பட்ட ஒரு எண் முறைமை ஆகும், இது 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்கேரிய பேரரசில் உருவாக்கப்பட்டது. இது முதலில் பல்கேரிய சாம்ராச்சியத்திலும் தெற்கு மற்றும் கிழக்கு ஸ்லாவிக் மக்களாலும் (Slavic peoples) பயன்படுத்தப்பட்டது. இந்த எண் முறைமை 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ரஷ்யாவில் பயன்படுத்தப்பட்டது, அதன்பின் இம் முறைமை இந்து-அரபு எண் முறைமையால் மாற்றீடு செய்யப்பட்டது.

**உரு 20 சிரிலிக் எண்முறைமை (Cyrillic numerals)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| А҃ | В҃ | Г҃ | Д҃ | Є҃ | Ѕ҃ | З҃ | И҃ | Ѳ҃ | І҃ |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| А҃І | В҃І | Г҃І | Д҃І | Є҃І | Ѕ҃І | З҃І | И҃І | Ѳ҃І | К҃ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| К҃А | К҃В | К҃Г | К҃Д | К҃Є | К҃Ѕ | К҃З | К҃И | К҃Ѳ | |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | |
| Л҃ | М҃ | Н҃ | Ѯ҃ | О҃ | П҃ | Ч҃ | Р҃ | | |
| 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 | 100 | | |
| С҃ | Т҃ | Ѵ҃ | Ф҃ | Х҃ | Ѱ҃ | Ѡ҃ | Ц҃ | | |
| 200 | 300 | 400 | 500 | 600 | 700 | 800 | 900 | | |
| ҂А҃ | ҂В҃ | | | | | | | | |
| 1000 | 2000 | | | | | | | | |

(தொடரும்)

## காஸ் செறிமான...

செறிமானங்கள் மாற்றப்பட்டுள்ளமை கனியவள கூட்டுத்தாபனத்தின் இரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட எரிவாயு கொள்கலன்களில் பியூட்டேன் மற்றும் ப்ரோப்பேன் என்பன 51:49 என்ற விகிதத் தில் அடங்கியுள்ளமை உறுதியாகியுள்ளது.

இது ஒரு பாரதூரமான பிரச்சினை என வும் அந்த அறிக்கையை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்குமாறும் பாராளு மன்ற உறுப்பினர் நளின் பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை நிராகரித்த வலுசக்தி அமைச் சர் உதய கம்மன்பில, நுகர்வோர் அதிகார சபையின் கோரிக்கைக்கு அமைய குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார். (ம-3)

## 4 எரிவாயு...

தித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது வீட்டிற்கு கொண்டு வந்த எரிவாயு சிலிண்டரில் எரிவாயு அடுப்பை இணைத்த சிறிது நேரத்தில் அடுப்பு வெடித்து சிதறியதாக ஹங்வெல்ல பொலிஸில் நேற்றுக் காலை முறைப்பாடு செய்துள்ளார்.

காஸ் சிலிண்டரை இரவு எரிவாயு அடுப் பில் இணைத்ததாகவும் சில நிமிடங்களில் அது வெடிக்கும் சத்தம் கேட்டதாகவும் அவர் கூறினார்.

நாங்கள் விரைவாக காஸ் சிலிண் டரை அகற்றிவிட்டோம். இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பாதுக்க - அருக்வத்தை யில் உள்ள உணவகம் ஒன்றில் எரிவாயு அடுப்புடன் இணைக்கப்பட்ட எரிவாயு குழாய் நேற்று வெடித்துள்ளது. எரிவாயு அடுப்பு வேலை செய்யாதபோதே வெடிப்பு ஏற்பட்டதாக உரிமையாளர் தெரிவித்தார்.

மேலும், ஹட்டனில் மல்லியப்புவ பகுதியில் உள்ள மற்றுமொரு உணவகத் திலும் இதேபோன்ற வெடிப்பு ஏற்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை உணவு சமைத்துக் கொண்டிருந்தபோது காஸ் இணைப்புக் குழாய் திடீரென தீப்பிடித்து எரிந்ததாக உணவகத்தின் உரிமையாளர் தெரிவித் தார். இந்த விபத்தில் உணவகம் சேத மடைந்தது.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு காஸ் கசிவு காரணமாக ஜா-எல துடெல்ல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வெடிப் புச் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எரிந்துகொண் டிருந்த அடுப்பை அணைத்த உடனேயே வெடி வித்து ஏற்பட்டதாக அப்பகுதி மக்கள் கூறினர். (ம-3)

## சிலிண்டர்...

எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவங்கள் அதிகளவில் பதிவாகின்ற நிலையில் அது குறித்து அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தினால் முன் னெடுக்கப்பட்ட 12 பரிசோதனை அறிக்கை கள் மேலதிக ஆய்வுகளுக்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள் ளது.

நுகர்வோர் அதிகார சபையினால் கொழும்பு உள்ளிட்ட சில மாவட்டங்களில் 12 எரிவாயு கொள்கலன்கள் மாதிரியாக பெறப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணைகளுக் காக பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளதாக குறித்த பிரிவின் பிரதானி பேராசிரியர் சாந்த வல்பொலகே தெரிவித் துள்ளார். (ம-3)

## சமஷ்டி அடிப்படை...

ஜேர்மன் அரசு உதவ வேண்டும் என இலங்கைக்கான ஜேர்மன் தூதுவரிடம் மாநகர முதல்வர் கோரிக்கை விடுத்துள் ளார்.

நேற்றைய தினம் யாழ்.மாநகர சபைக்கு விஜயம் செய்த ஜேர்மன் தூதுவர் ஹோல் கர் சியூபர்ட் யாழ்.மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை சந் தித்தார்.

இச்சந்திப்பு ஆக்கபூர்வமாக நடை பெற்றதாகவும் தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையான சமஷ்டி அடிப்படை யான தீர்வை பெற்றுக்கொள்வதற்கும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்பு உட்பட்ட அநீதிகளுக்கு நீதியை பெற்று கொடுப்பதற்கும் ஜேர்மன் உள் ளிட்ட சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததாக முதல்வர் தெரிவித்தார்.

மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்ட மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சிறப்பு தீர்ப்பாயம் ஒன்றிற்கு வி யங்கள் பாரப்படுத்தப்பட வேண்டும் என் றும் முதல்வர் வலியுறுத்தினார். (ம-3,33)

## கிணற்றில்...

குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் குழந்தை கிணற்றி லிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு

# ஐ.தே.கவிலிருந்து விலகினார் முன்னாள் அமைச்சர் அர்ஜுன

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரண துங்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வில கும் தீர்மானத்தை கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசி யக் கட்சி பாரிய தோல்வியை சந்தித்ததாக வும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள வேண் டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள மற்றும் எதிர் காலத்தில் வரும் சவால்களை எதிர்கொள் ளும் வகையிலான திட்டங்கள் ஐக்கிய தேசி யக் கட்சி வசம் கிடையாது என அவர் கூறி யுள்ளார். இதனால், கட்சியில் தொடர்ந்தும் இருப்பதில் எவ்வித பயனும் கிடையாது என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள் ளார். (ம-3)

சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று இரவு உயிரிழந்துள் ளது. (ம-3,104)

## உயிரிழந்த...

எடுப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## 23 பேர்...

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் கோவிட்-19 தொற்றினால் மரணித் தோரின் மொத்த எண்ணிக்கை 14,328 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## +747...

கையின் மொத்த கொரோனாத் தொற் றாளர்களின் எண்ணிக்கை 563,265 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கோயில் பூசகர்...

இந்த சந்தேகநபர்கள் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கடுக்காமுனை பிர தேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடுக்காய்முனை பிள்ளையார் கோயி லின் பூசகரும் இன்னுமொரு நப ருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு ள்ளனர்.

அதிரடிப் படை யினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து கொக்கட்டிச் சோலை பொலிஸ் பிரிவின் கொக் கட்டிச்சோலை - அம்பலாந்துறை வீதியில் கடுக்கா முனை பிரதேசத் தில் நடத்திய தேடு தலில் கைவிடப் பட்ட இடம் ஒன்றில் விளக்கேற்றி, பட்டாசு கொளுத்தி மாவீரர் தினத்தை அனுஷ்டித்த இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர். (ம-3)

## அனை...

சர்வதேச அளவில் பரவக்கூடிய வாய்ப் புள்ளது என எச் சரித்துள்ள உலக சுகாதார ஸ்தாபனம் "கடுமையான விளைவுகளை" ஏற்படுத்தக்கூடும்.

ஆகையால், அதற்கு முகங் கொடுப்பதற்கு தயா ராகுமாறு அறி வுறுத்தியுள்ளது.

தடுப்பூசி திட்டத்தை விரைவுபடுத்து மாறும் அத்தியாவசிய சுகாதார சேவை கள் நடைமுறையில் இருப்பதை உறுதிப் படுத்துமாறும் உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

உலகளாவிய ஆபத்து மிகவும் அதிக மாக மதிப்பிடப்படுகிறது." என்றும் மேற்படி ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

*(மற்றுமொரு செய்தி உள்ளே)*

## 3 ஆயிரம்...

மன்றில் நேற்று முற்பகல் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த விவசாய அமைச் சர் மகிந்தானந்த அளுத்கமகே வடக்கில் மாத்திரமின்றி நாட்டின் பல பகுதிகளில் இந்தப் பிரச்சினை காணப்படுவதாக குறிப் பிட்டார்.

அத்துடன் வடக்கில் 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கு அமைச் சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3)

### தன நிதானய

திகதி - 2021.11.29
சீட்டிழுப்பு இலக்கம் - 631

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| A | 26 | 50 | 53 | 65 |

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 29.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2896

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| F | 06 | 09 | 32 | 62 |

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2021/11/29
சீட்டிழுப்பு இலக்கம் 4601

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| T | 2 | 7 | 5 | 7 | 0 | 0 |

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 29/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0949

| வெற்றி எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| S | 10 | 11 | 45 | 53 | 78 |

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 29/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1173

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடகம் | 8 | 1 | 3 | 0 | 4 | 9 |

தேசிய லொத்தர் சபை

### அத கோடிபதி

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1404
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 29.11.2021

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,804,260

வெற்றி இலக்கங்கள்: 44 59 63 67 — ஆங்கில எழுத்து L

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3739
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 29.11.2021

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,012,420

வெற்றி இலக்கங்கள்: 07 20 46 73 — ஆங்கில எழுத்து M

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1578 — நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 29.11.2021 — தினம் திங்கள்

வெற்றி இலக்கங்கள்: U 09 33 63 71

அடுத்த சுப்பர் ஜக்பொட் : 72,314,717/=

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=

திகதி 29.11.2021
வெற்றி வாரம் 3290
வர்ணம் மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 22 34 40 42 — கும்பம்

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,898,800/=

### ஜயோதா

சீட்டிழுப்பு வாரம் 1789
சீட்டிழுப்பு திகதி 29.11.2021

வெற்றி இலக்கங்கள்: 27 30 64 65 — ஆங்கில எழுத்து Z

எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,375,208/-

தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# அரசுக்கு எதிராக காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம்

## அரச உத்தியோகத்தர் தொழிற்சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

**10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு மற்றும் ஏனைய கோரிக்கைகளை அரசாங்கம் வழங்கத் தவறினால் அனைத்து அரச ஊழியர்களும் காலவரையற்ற தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று கண்டியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சங்கத்தின் தலைவர் சுமித் கொடிகார, ஆர்ப்பாட்டம் தொழிற்சங்க நடவடிக்கைக்கான ஒரு முதற்படியாகும்.

பொது மக்கள் மற்றும் அரச ஊழியர்களின் சுமையை குறைக்கும் வகையில் 2022 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ரூபாய் 10,000 கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளார். சமூக ஊடகங்களில் அரசு ஊழியர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதைத் தடுக்கும் வகையில் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை திரும்பப் பெறப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அரச ஊழியர்கள் நாட்டுக்கு சுமையாக இருப்பதாக நிதியமைச்சர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும் ஓய்வு பெறும் வயதை 65 ஆக உயர்த்தும் தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் எனவும் கொடிகார வலியுறுத்தியுள்ளார். (ம-3)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் (8842)
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

# வடக்கில் மேலும் 7 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வடக்கில் மேலும் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 174 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், யாழ். போதனா வைத்தியசாலையில் 3 பேருக்கு (15 வயது சிறுமி, 43 மற்றும் 68 வயது ஆண்கள்), பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர் (பிறந்து 4 நாட்களேயான சிசு), கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (47 வயது பெண்), மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (ஆண்), வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (உயிரிழந்த நபர்).

இவ்வாறு மேலும் 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

வெற்றுக் கான்கள் விற்பனைக்கு

5 லீற்றர் கொள்ளளவு உடைய நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிற வெற்றுக் கான்கள் மொத்தமாக விற்பனைக்கு உண்டு.
(இ).
தொடர்பு
076 097 3121

Inner Circle (pvt) Ltd
வேலை வாய்ப்புகள்
யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய கிளைகளில் எம்முடன் இணைந்து தொழில் புரிவதற்கான முதல் 50 பதவி வெற்றிடங்கள்.
நீங்கள் O/L தகைமையுடையவரெனில் முன்னனுபவம் எதிர்பார்க்கப்படமாட்டாது. ஆரம்ப வருமானமாக பதவி நிலைகளுக்கேற்ப 18,000/= தொடக்கம் 45,000/= வரை EPF+ETF பெறுவதுடன் தொழில் நிரந்தரமாக்கப்படும்.
பதவி வெற்றிடங்கள்
○ விநியோகஸ்த்தர்
○ மேற்பார்வையாளர்
○ அலுவலக உதவியாளர்
○ முகாமையாளர்
○ Tele callers

நீங்கள் உங்கள் Bio data /CV இனை 076 756 5659 Whatsapp செய்வதுடன் தொடர்புக்கு: 076 770 7759
(8843)

# நன்றி நவிலல்



கடந்த 25.11.2021
வியாழக்கிழமை
இறைபதமடைந்த
எங்கள்
குடும்பத் தலைவர்

## கார்த்திகேசு வேலும்மயிலும்

(ஓய்வுநிலை அதிபர்)

அவர்களின் இறுதிநிகழ்வில் எமக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்கள் மற்றும்

நேரிலும் தொலைபேசி மூலமாகவும் சமூகவலைத்தளங்கள் ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்கள், மலர்வளையங்கள், அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் போன்றவற்றின் ஊடாக அஞ்சலி செலுத்தியவர்கள், இறுதிக் கிரியைகளின்போது கலந்துகொண்டவர்கள், இன்னும் பல வழிகளில் உடனிருந்து உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் : வி.கெ.ஜெகன் (மகன்)
(முன்னாள் பா.ம.உ.)

(C 3127)

German, Netherland (Holand), Swiss, Ostria நாடுகளுக்கான மொழி வகுப்புக்கள்
Embassy இன் A1 exam இற்கு ஏற்றவாறு.
in Jaffna
Mrs.P.Kajenthini
(8889)
T.P: 077 160 4823

ரியூசன் சென்ரருக்கு Clerk வேலைக்கு தேவை
பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது. யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் இருப்போர் மட்டும். (5 - 8 Km தூரத்திற்குள்) வயது : 23- 38 உட்பட்டோர், சம்பளம் - 10,000 ரூபா, வேலை நேரம்: 8.30 - 5.30 வரை. திங்களிலிருந்து சனி வரை.
077 293 5265 (8888)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3014)
0768226240 DHL

கனடாவில் வேலைவாய்ப்பு WORK PERMITS
தகுதிகள்:- A/L PASS / DIPLOMA / DEGREE ஆங்கில அறிவு
அனைத்து துறைகளிலும் அனுபவம், அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777
(C-3089)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.